# ஐய்யறிவு ஜீவராசிகளும் உயிரற்ற பொருட்களும் தங்கத் திருமேனி தாஹா நபியை நேசித்தன!

**காயல் M.Y. ஜெஸ்முதீன் DCA**

அகிலத்தின் அருட்கொடை அண்ணல் எங்கள் கோமான் நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை உயிருள்ள ஐய்யறிவு பிராணிகளும், உயிரற்ற பொருட்களும் நேசித்தன. அவர்களிடம் பேசியது. ஆனால் ஆறறிவு படைத்த மனித இனமோ பூமானின் சிறப்பை அறியாமல் அவர்களின் புனிதத்தை விளங்காமல் ஏனோ தானோ வென்று தான்தோன்றித் தனமாக பேசியும் எழுதியும் வருகின்றனர். ஆகையால் புனிதத்தின் பேரரசர் கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் பெருமைதனை ஹதீஸ் ஒளியில் சற்று உட்நோக்கி பார்ப்போமா?

## பகுத்தறிவில்லா ஜீவராசிகள்

பறவை : செய்யிதினா அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களுடன் அண்ணல் கோமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் வனாந்தரம் வழியே செல்லும்போது கூட்டில் அமர்ந்திருந்த பறவை ஒன்று ஈனக் குரலில் சப்தமிட்டது. பறவையின் கெஞ்சல் மொழி பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் கவனத்தை ஈர்த்தது. இப்பறவை என்ன கூறுகின்றது தெரியுமா? என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்க, 'அல்லாஹ்வும், அவனுடைய ரசூலும் நன்கு அறிவர்! என அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் கூறினார்கள்.

ரப்பே! எனது கண் பார்வையை பறித்து என்னை குருடாக்கி விட்டாய்! இப்போது பசியில் வாடும் எனக்கு உண்ண உணவு வழங்கு! என வேண்டுகிறது என்றார்கள்.நடக்கப் போகும் காட்சிகளை இருவரும் கூர்ந்து கவனிக்க ஆரம்பித்தார்கள். ஒரு வெட்டுக்கிளி விரைந்து வந்து பறவையின் வாயில் அமர அதை அப்பறவை மென்று



விழுங்கியது. மீண்டும் ஏதோ குரல் எழுப்பியது.

இப்போது என்ன கூறுகின்றது தெரியுமா? என பெருமானார் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கேட்க அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் மீண்டும் அதே பதிலைக் கூறினார்கள். இப்போது பறவை அல்லாஹ்வை புகழ்கின்றது. நினைவு கூர்ந்தவனை மறவாது இரட்சிக்கும் அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் என நன்றிப் பெருக்கை வெளிப்படுத்துகின்றது. என்று நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் விளக்கமளித்தார்கள். (நூல்: ரூஹுல் பயான்)

**உடும்பு** : ஒரு கிராமவாசி உடும்பை வேட்டையாடி கையில் வைத்துக் கொண்டு வீட்டில் கொடுத்து அறுத்து,பொறித்து சாப்பிடலாம் என்று வருகின்றார். அவ்வாறு வரும் வழியில் ஒரு கூட்டமாக மக்கள் இருக்கின்றார்கள். அந்த கிராமவாசி இது என்ன கூட்டம்? யார் அவர்கள் என்று கேட்கிறார். அப்பொழுது அந்த மக்கள் இங்கு நபி முஹம்மது இப்னு அப்துல்லாஹ் இருக்கிறார்கள் என்று சொன்னவுடன் கூட்டத்தை விலக்கிக் கொண்டு அண்ணலார் முன் வருகிறார். வந்தவர், அண்ணலாரைக் நோக்கி சொன்னார் 'லாத் உஸ்ஸா' மேல் சத்தியமாக சொல்கின்றேன். உங்களை விட கோபமாகவுள்ள ஆண் யாருமில்லை. என்னுடைய கூட்டத்தினர் என்னை அவசரக்காரன் என்று சொல்லாமலிருந்தால் உங்களை கொலை செய்து விடுவேன்.

எங்களுடைய சாமிகளை ஏசும் உங்களை நீக்கியதின் மூலம் 'ஹாஷிம்' குடும்பத்தினருக்கு மகிழ்வை உண்டாக்கியிருப்பேன். அவரின் நிலையை உணர்ந்த அண்ணலார் பனூசுலைம் கோத்திரத்தின் சகோதரனே! ஏன் இப்படி சொல்கிறாய்? என்று கேட்டபொழுது அந்த கிராமவாசி சொன்னார். இந்த உடும்பு ஈமான் கொள்ளும் வரை நான் ஈமான் கொள்ள மாட்டேன். என்று கூறி உடும்பை தூக்கி அண்ணலாரின் முன்னால் வீசினான்.

இதனைக் கண்ட 'உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள், எனக்கு அனுமதி தாருங்கள் இவனது தலையை வெட்டி விடுகின்றேன் என்றார்கள். அதற்கு பூமான் நபியவர்கள் சொன்னார்கள் நபி என்பவர்கள் பொறுமையாகத்தான் இருப்பார்கள் என்பது உங்களுக்குத்

தெரியாதா?' சொல்லி விட்டு உடும்பை நோக்கி உடும்பே! என்று கூப்பிட்ட போது உடும்பு அரபி மொழியில் 'லெப்பைக்' என்று சொன்னது. மீண்டும் அண்ணலார் உடும்பே! நீ யாரை வணங்குவாய்? என்று கேட்டபோது வானத்தின் அர்ஷையையும், பூமியின் அர சாட்சியையும் உள்ளடக்கிய வனையே வணங்குவேன் என்றது. நான் யார்? என்று பூமான் நபி யவர்கள் உடும்பிடம் கேட்டபோது, அல்லாஹ்வின் திருத்தூதர்: கடைசி நபி: உங்களை நம்பியவன் வெற்றி பெற்றான். உங்களை பொய் யாக்கியவன் நஷ்டமடைந்து விட் டான் என்றது. உடனே கிராமவாசி இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

(அறிவிப்பு : செய்யிதினா இப்னு உமர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் நூல் : பைஹகீ தப்ரானீ ஹாகிம்.)

**ஒட்டகம் :** ஸெய்யிதினா யஃலா இப்னு முர்ரா ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

நாங்கள் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு சென்று கொண்டிருந்தோம். வழியில் பேரீத்தம் மரத்தோப்பில் ஒரு ஒட்டகம் தண்ணீர் இறைத்து கொண்டிருந்தது. அதை நாங்கள் கடந்து செல்லும்போது அந்த ஒட்டகம் பூமான் நபியவர்களை பார்த்தவுடன் சப்தமிட்டு மூக் கணாங்கயிற்றை அவிழ்த்து விட்டு இரண்டு கண்களிலிருந்து கண்ணீர் பெருக்கெடுக்க நபியவர்களின் முன்னால் வந்து ஸஜ்தாச் செய்தது. நபியவர்கள் சொன்னார்கள்.40 ஆண்டு காலம் எனது எஜமான ருக்கு வேலை செய்தேன்.இப்போது எனக்கு வயதாகிவிட்டது. தீனியை குறைத்து விட்டு வேலையை அதிகமாக வழங்குகிறார்கள் என சொல்கின்றது என்று "நபியவர்கள் தோழர்களை நோக்கி சொன் னார்கள்: கால் நடைகளிடம் மிகுந்த கருணையோடு நடந்து கொள்ளுங் கள்." (நூல் : பைஹகீ, அஹ்மது, அபூநயீம்.)

**மான் :** வேட்டைக்காரன் ஒருவன் வேட்டையாடி மானை கட்டி வைத்திருந்தான். அந்த வழியாக, "மாநபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நடந்து வந்த போது மான் அழைத்தது ,யாரசூலல்லாஹ்! நான் குட்டியீன்ற மான் எனக்கு இரண்டு குட்டிகள் உள்ளன. அந்த இரண்டு குட்டிக்கும் பால் கொடுத்து விட்டு வந்து விடுகின்றேன்.எனக்கு அனுமதி தாருங்கள் என்றது. வேட்டையாடிய வர்களை நோக்கி! நபிகள் நாதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் இந்த மானை

அவிழ்த்து விடுங்கள் தமது குட்டிக்கு பால் கொடுத்துவிட்டு வந்து விடும் என்று சொன்னார்கள்.

அந்தமக்கள் (வேட்டையாடியவர்கள்) இதற்கு யார் பொறுப்பு? என்று கேட்டார்கள். பூமான் நபியவர்கள் நான் பொறுப்பு என்று சொன்னார்கள்" மானை அவிழ்த்து விட்டார்கள். அது சென்று தமது குட்டிக்கு பால் கொடுத்துவிட்டு திரும்பி வந்தது. மானை மீண்டும் கட்டிப் போட்டார்கள். நபிகளார் இந்த மானை விலைக்கு கேட்டார்கள். மான் உங்களுக்கு தான் என்று கூறி அந்த மக்கள் ஒப்படைத்து விட்டனர். நபிகளார் அதை அவிழ்த்து விட்டார்கள்.அவை காட்டு பகுதிக்கு சென்று விட்டது. (அறிவிப்பு:- செய்யதினா அனஸ் ரலியல்லாஹு அன்ஹு. நூல்: தாரகுத்னீ, தப்ரானீ)

## உயிரற்ற (ஜடப்) பொருட்கள்

**மலை :** 1. "நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். உஹத் மலையை பார்த்தார்கள். பின்னர் தங்களது தோழர்களிடம் கூறினார்கள். நிச்சயமாக உஹத் மலை நம்மை நேசிக்கின்றது. எனவே நாமும் அதை நேசிக்கின்றோம்".

(அறிவிப்பு :- அனஸ் ரலியல்லாஹ் அன்ஹு நூல் முஸ்லிம்.)

2. செய்யிதினா ஸஹ்ல் பின் ஸஃது ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். 'உஹது மலை சுவனத்தின் தூண்களில் ஒரு தூணாகும் என்று நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள்.' (நூல் அபூயஃலா தப்ரானீ)

3. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களும், அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு, உமர் ரலியல்லாஹு அன்ஹு, உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு ஆகியவர்களும் 'உஹத்' மலையில் ஏறினார்கள். அப்பொழுது (மலையின் ஒரு பாறை மட்டும்) தளும்பி ஆட்டம் கொடுத்தது. அப்பொழுது உஹதே!நீ! அமைதியுறு! உன்மீது ஒரு நபியும், ஒரு ஸித்திக்கும் இரண்டு ஷஹீதுகளும் இருக்கின்றார்கள் என்று பூமான் நபியவர்கள் சொன்னார்கள். அப்போது அது அமைதியானது.

(அறிவிப்பு:- அனஸ் ரலியல்லாஹ் அன்ஹு. நூல்: புகாரி (3675)

## கல்லும் மலையும் மரமும்

அலி ரலியல்லாஹ் அன்ஹு அறிவிப்பு:

1. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களுடன் நான் மக்காவிலிருக்கும் போது



மக்காவில் சில பகுதிகளுக்கு சென்றோம்.அந்த வழிகளினுண்டான மலைகளும், மரங்களும், நபிகள் நாதர் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களைப் பார்த்து, அஸ்ஸலாமு அலைக்கும்! யாரசூலல்லாஹ்! என்று சொல்லியது.(நூல் திர்மிதி (3646)தாரமீ)

2. நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். மக்காவிலுள்ள ஒரு கல்லை நான் நன்கு அறிவேன். நான் நபியாக அனுப்பப்படுவதற்கு முன்பே அந்தக் கல் எனக்கு ஸலாம் சொல்லிக் கொண்டிருந்தது. அதை நான் இப்போதும் காண்கின்றேன்.

(அறிவிப்பு:- ஜாபிர் இப்னு ஸமுரா ரலியல்லாஹு அன்ஹு நூல்: திர்மிதீ (3441) முஸ்லிம் .)

3. "நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தன்னுடைய பெரிய தந்தை அப்பாஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்களிடம் சொன்னார்கள்.

நாளை நீங்களும், உங்களுடைய பிள்ளைகளும், வீட்டை விட்டு எங்கும் போக வேண்டாம். என்னை எதிர்பார்த்திருங்கள். பூமான் நபியவர்கள் சொல்லிய பிரகாரம் அவர்களின் வீட்டிற்கு போனார்கள். ஸலாம் கூறினார் கள்.

NBC
Nahvi Biz Consultants
10 Jalan Besar #17-02, Sim Lim Tower,
Singapore 208787
Tel: +65 6396 7554,
Fax : +65 6337 2134
Web : www.usoftsolutions.com

அவர்களும் பதில் கூறினார்கள். யாரசூலல்லாஹ்! நீங்கள் எப்படி இருக்கிறீர்கள்! என்றார்கள்.நான் நலமாகயிருக்கின்றேன் என்று சொன்னார்கள். மாநபியவர்கள் அங்குள்ள உறவினர்களைக் நோக்கி நீங்கள் எல்லோரும் நெருங்கி வாருங்கள் என்று அழைத்தார்கள். அனைவரையும் அழைத்து தங்களது முபாரக்கான போர்வையைக் கொண்டு போர்த்தி னார்கள். பின்பு இந்த அப்பாஸ் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் என்னுடைய தந்தையுடன் பிறந்த வர்கள் இவர்கள் அனைவரும் எனது குடும்பத்தினர்கள்.

யா அல்லாஹ்! என்னுடைய போர்வையைக் கொண்டு மறைத்ததுபோல் இவர்களை நரகத்தை விட்டும் மறைத்து விடுவாயாக என்றார்கள் அவ்வாறு சொன்னவுடன் அந்த வீட்டின் தலைவாசலும் சுவர்களும் (கல்) மூன்று முறை ஆமீன் சொன்னது."

அறிவிப்பு அபூஹுஸைதி அல் பத்ரீய்யி ரலியல்லாஹு அன்ஹு நூல் பைஹகீ அபூநுஅய்ம்.

4. அபூதர் ரலியல்லாஹ் அன்ஹு அவர்கள் சொன்னார்கள்:- நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் தனது தோழர் களான அபூபக்கர் ரலியல்லாஹ் அன்ஹு, உமர் ரலியல்லாஹு அன்ஹு, உஸ்மான் ரலியல்லாஹ் அன்ஹு ஆகியோர்களுடன் ஒரு இடத்தில் இருந்தார்கள். அப்போது ஏழு பொடி கற்களை எடுத்து கையில் வைத்தார்கள். அந்த ஏழு கல்லும் தஸ்பீஹ் செய்தன. எவ்வா றெனில், தேனீயின் ரீங்காரம் போல் அவை சத்தம் போட்டன. இதை நாங்கள் கேட்டோம்.பின்பு பூமான் நபியவர்கள் அதை தரையில் வைத்ததும் அது அமைதியாக யிருந்தது. பின்பு அந்த ஏழு கற் களையும் தனது தோழரான அபூபக்கர் ரலியல்லாஹு அன்ஹு அவர்களின் கையில் வைத்தார்கள். தேனீயின் ரீங்காரம் (தஸ்பீஹ்) போல் செய்தது. பின்பு அதை தரையில் வைத்ததும் அது அமைதி யாக இருந்தது. பின்பு அந்த ஏழு கற்களையும் தனது தோழரான உமர் ரலியல்லாஹ் அன்ஹு அவர்களின் கையில் வைத்தார்கள். அதே போன்று தேனீயின் ரீங்காரம் கேட்டது. பின்பு அதை தரையில் வைத்ததும் அது அமைதியானது. பின்பு அந்த ஏழு கற்களையும் தனது தோழரான உஸ்மான் ரலியல்லாஹு அன்ஹு அவர் களின் கையில் வைத்தார்கள். அதே போன்று தேனீயின் ரீங்காரம் கேட்டது. பின்பு அவற்றை தரையில் வைத்ததும் அது அமைதியாக யிருந்தது.

(நூல்:- பைஹகீ (தலாயினுள் நுபுவ்வா) தப்ரானீ (அவ்சத்) அபூநயீம் (அத்-தலாயில்)

இப்னு நஸீர் இமாமின் அல்பிதாயா வந்நிஹாயா (பாகம்-6) - (பக்கம் -132)

5. செய்யிதினா ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

நான் "நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களோடு பிரயாணத்திலிருந்தேன். நபியவர்கள் மலம், ஜலம் கழிப்பதற்கு செல்வதாகயிருந்தால் யாரும் பார்க்காதளவுக்கு வெகுதூரம் சென்று விடுவார்கள். ஓரிடத்தில் தங்கினோம். அவை வெறும் மைதானமாக இருந்தது. நபியவர்கள் என்னிடம் சொன்னார்கள்.

ஜாஃபிரே! தண்ணீர் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு என்னோடு வாருங்கள்.தண்ணீரை நிரப்பிக் கொண்டு யாரும் பார்க்காதளவுக்கு வெகுதூரம் சென்றோம். அங்கு இடைவெளி விட்டு இரண்டு மரங்கள் நின்றன.பூமான் நபியவர்கள் சொன்னார்கள். ஜாஃபிர் அவர்களே! அந்த மரத்திடம் சென்று சொல்லுங்கள். பூமான் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சொன்னார்கள். உன் தோழி மரத்தோடு ஒன்றாக சேர்ந்து விடு.இரண்டு மரங்களுக்கு பின்னாலிருந்து அவர்களின் தேவையை நிறைவேற்ற வேண்டுமாம். அவ்வாறே நான் சொன்னேன். மரம் கடுமையாக அசைந்து போய் நின்று


**I.A.S**

**FANCY SHOP**

Perfumes, Body Spray, Fancy, Chocolates & All Items

# 404, Burma Bazaar, Rajaji Salai, (Opp State Bank Of India) Chennai- 600 001.

**Mob. : 9884883373**




கொண்டது. பின்பு நபியவர்கள் தனது சுய தேவையை நிறைவேற்றிக் கொண்டார்கள்." (நூல்:- பைஹகீ (447)

6. ஒரு கிராமத்து அரபி ஒருவர் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் முன் வந்து யாரசூலல்லாஹ்! நான் இஸ்லாமாகி விட்டேன்.எனக்கு உறுதி அதிகமாக வேண்டும். அதனால் எனக்கு ஏதாவதொரு அற்புதத்தை காட்டுங்கள் என்று கேட்ட பொழுது நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் நீங்கள் எதை நாடுகின்றீர்கள்? என்று கேட்டார்கள். அப்பொழுது அந்த அரபி அந்த மரத்தை அழையுங்கள் அது வர வேண்டும் என்று சொன்னார்.

உடனே, நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள், அந்த கிராமத்து அரபியிடம் சொன்னார்கள். அந்த மரத்திடம் சென்று சொல்லுங்கள், 'நான் கூப்பிடுகிறேன் என்று கூறுங்கள்! உடனே மரத்திடம் போய் மரமே! உன்னை ரசூலல்லாஹ் அழைக்கின்றார்கள்.அதற்கு பதில் கொடு என்று சொன்னார். உடனே அந்த மரம், இரு பக்கங்களும் சாய்ந்து வேரோடு பிடுங்கிக் கொண்டு நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தர்பாருக்கு வந்து அஸ்ஸலாமு அலைக்கும்! யாரசூலல்லாஹ்! என்று சொன்னது. உடனே இவற்றைப் பார்த்த கிராமப்புற அரபி போதும் போதும் என்று சொன்னார்கள்.

(நூல் அபூநயீம்.)

**குறிப்பு** :- மேலும் மரம் சம்பந்தமான ஹதீஸ், முஸ்லிம், அபூதாவூது, அஹ்மது, பைஹகீ, இப்னு மாஜா, இப்னு ஹிப்பான், ஹாகிம் போன்ற ஹதீஸ் கிரந்தங்களிலும் வந்துள்ளது.

7. செய்யிதினா ஜாபிர் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள்.

நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் ஜும்ஆ அன்று ஒரு மரக்கட்டையில் நின்று 'குத்பா' ஓதுவார்கள்.மிம்பர் படி கட்டப்பட்ட போது அதை விட்டு இறங்கினார்கள். மரக்கட்டை அழ ஆரம்பித்தது. நிறைமாத ஒட்டகத்தின் சப்தத்தைப் போன்று நாங்கள் கேட்டோம். நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் உடனே (மிம்பர்) அதைவிட்டு இறங்கி வந்து அந்த மரக்கட்டையின்மீது கையை வைத்தார்கள். அந்த மரக்கட்டை அமைதியாகி விட்டது. (நூல்:- புகாரி (867, 917, 918) இப்னு மாஜா (1407) பைஹகி)

8. அனஸ் ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் சொன்னார்கள். மரக்கட்டை ஒழுத ஹதீஸை ஹஸன் பஸரி ரலியல்லாஹு அன்ஹு அவர்கள் முஸ்லிம் சகோதர மக்களுக்கு சொல்லும்

போது இவ்வாறு சொல்வார்கள். முஸ்லிம் சகோதர மக்களே! நிச்சயமாக ஒரு மரக்கட்டை நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை சந்திப்பதற் காக காதல் வயப்பட்டு அழுது இருக்கின்றது.நீங்களும் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்களை காதல் கொள்வதற்கு பாத்தியப்பட்டவர்கள்.

குறிப்பு மேற்கண்ட விளக்கம் புகாரி ஹதீஸ் 3583-ன் விளக்க வுரையில் இடம் பெற்றுள்ளது. மேலும் பத்ஹுல் பாரி பாகம் -6. பக்கம் 674-லும் உள்ளது.

9. நபிகள் நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் அந்த மரக் கட்டையிடம் கேட்டார்கள். நீ மரக் கட்டையாக ஆக்கப்படுவதற்கு முன்பாக மரமாகயிருந்தாயே! அந்த இடத்தில் உன்னை நட்டு வைத்து விடவா?

சொர்க்கலோக ஆறு களி லிருந்து நீ தண்ணீரை குடித்து அழகிய செடியாகி கனிகள் கொடுக்க ஆரம்பித்து விடுவாய். உன்னிலிருந்து அல்லாஹ்வின் நேசர்கள் (வலிமார்கள்) சாப்பிடு வார்கள்.சுவனத்தில் நட்டி வைப் பதைத் தான் அந்த மரக்கட்டை தேர்ந்தெடுத்தது. (நூல்:- தாரமீ)

குறிப்பு மேற்கண்ட நூலில் இந்த ஹதீஸ் பதிவாகியுள்ளது என்று, ஃபத்ஹுல் பாரியில் பாகம் -6 பக்கம் 676ல் இருக்கின்றது.

அன்பார்ந்த சகோதர, சகோதரி களே! மேற்கண்ட பொன்மொழிகள் மூலம் அண்ணல் எங்கள் கோமான் நபி ஸல்லல்லஹு அலைஹி வஸல்லம் அவர்களின் தனிச் சிறப்புகளை அவர்களுடன் உயிரற்ற, உயிருள்ள பொருள்கள் பேசியதும், நேசித்ததும் உதவி பெற்றதும் ஏற்றம் அடைந்ததும் உள்ளங்கை நெல்லிக்கனி போல் அறிந்து கொள்ளலாம். விரிவஞ்சி மிக மிக சுருக்கமாகவே ஹதீஸ் ஆதாரங்களைத் தந்துள்ளேன். ஆகவே உலகம் போற்றும் உத்தமர், "ஈருலக சர்தார் தங்கத் திரு மேனி தாஹா நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் சாதாரண மனிதரல்ல. அவர்களின் சிறப்புகள் பெருமைகள் கஸீதாக் கள் படிப்பது ஷிர்க்குமல்ல, பித்அத்தும் அல்ல மாறாக அவை சுவனம் செல்லும் நல்வழி பாதை யாகும் என்பதில் கிஞ்சிற்றும் ஐய மில்லை. ஆகையால் கோமான் நபி புகழ்பாடுவோம்! ஈடேற்றம் பெறு வோம்! வாழ்வில் ஒரு முறையேனும் தாஹா நபி ஸல்லல்லஹு அலைஹி வஸல்லம் அவர்கள் மீது காதல் கொண்டு அவர்களின் பொன்வதன முகத்தை பார்த்து ரசித்து மகிழ்ந்து இவ் வுலகை விட்டும் பிரிவோம்.............

வஸ்ஸலாம் !